செ.வெ.எண்: 65 22.01.2008

<u>பத்திரிக்கை செய்தி</u>

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட சமூகநல அலுவலர்களின் ஆய்வு கூட்டம் 22.01.2008 அன்று சமூகநல இயக்ககத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சமூகநலத்துறை செயலாளர் அவர்களும் கலந்து கொண்டு சமூகநலத்துறை மூலம் நிறைவேற்றப்படும் அனைத்து திட்டப்பணிகளின் முன்னேற்றத்தையும், குறிப்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் உள்ளிட்ட அனைத்து திருமண உதவி திட்டத்தில் கண்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் திருமண நிதி உதவித் திட்டங்களை ஆய்வு செய்த போது மாவட்ட சமூகநல அலுவலர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளை புகார்களுக்கு இடமின்றி தேர்வு செய்யுமாறும், அரசு இத்திட்டங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தி வருவதால் தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே திட்டத்தின் பயன் சென்றடையச் செய்வது மாவட்ட சமூகநல அலுவலர்களின் பொறுப்பு என வலியுறுத்தி கூறினார். இதில் புகாருக்கு உள்ளாகும் அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்தார். இத்திட்டத்தை மேம்படுத்த அரசு எடுத்துள்ள முன்னோடி நடவடிக்கைகளான மாநில அளவிலான கண்காணிப்புக்குழு, திடீர் ஆய்வு , மண்டல அளவிலான ஆய்வு, மாவட்ட சமூகநல அலுவலர்களின் 15% கள ஆய்வு, இத்திட்டம் தொடர்பாக பொதுமக்கள் அணுகவேண்டிய மாநில அளவிலான தொலைபேசி உதவி எண் ( 044 - 28545728) அமைத்துள்ளது, மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள குறை தீர்க்கும் பிரிவு ஆகியவற்றை பொதுமக்கள் அணுகலாம் என மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.